செ.வெ.எண் -13 நாள்:09.01.2018

## மாநில அளவில் நடைபெற்ற ஜீனியர் ரெட்கிராஸ் பயிற்சி முகாமில் முதலிடம் பெற்ற அரியலூர் மாவட்ட மாணவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் பாராட்டினார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஜீனியர் ரெட்கிராஸ் அமைப்பின் சார்பில் நடைபெற்ற மாநில அளவிலான ஜீனியர்கள் பயிற்சி முகாம் தேனி மாவட்டத்தில் நடைபெற்றது.

இம்முகாமில், உடையார்பாளையம் கல்வி மாவட்டம் சார்பாக கலந்துகொண்ட மாணவர்கள் தேனியில் நடைபெற்ற கண்காட்சியில் மாநில அளவில் முதலிடம் பெற்றனர்.

முதலிடம் பெற்ற பி.ஹென்றி, ஜே.கோஷ்வா, ஐ.எட்வின், எ.பெர்னோ ஆகிய மாணவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் பாராட்டி, வாழ்த்து தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர்.த.புகழேந்தி, கல்வி மாவட்ட ஜே.ஆர்.சி ஒருங்கிணைப்பாளர் டி.சாமிநாதன், பள்ளி ஒருங்கிணைப்பாளர் சி.ஜோசப்ராஜ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.